Teachingninja.in

Latest Govt Job updates

Private Job updates

Free Mock tests available

Visit - teachingninja.in

# TNPSC
# Gr-I Mains

## Previous Year Paper
### (TET) Paper-I
### 03 Dec, 2024

Teachingninja.in

**TETIBMI/24**

Don't write anything in this space

Booklet Serial No. :

Don't write anything in this space

தேர்வு : உதவி ஆணையர், தமிழ்நாடு இந்து சமய அறநிலைய (ஆட்சி) பணி (தொகுதி-IB பணி)க்கான முதன்மைத் தேர்வு

பாடம் : தமிழ்மொழி தகுதித் தேர்வு (பத்தாம் வகுப்புத் தரம்) (தாள் – I) (விரிந்துரைக்கும் வகை)

தேர்வு நாள் : 03.12.2024 மு.ப.


தேர்வு : உதவி ஆணையர், தமிழ்நாடு இந்து சமய அறநிலைய (ஆட்சி) பணி (தொகுதி-IB பணி)க்கான முதன்மைத் தேர்வு

பாடம் : தமிழ்மொழி தகுதித் தேர்வு (பத்தாம் வகுப்புத் தரம்) (தாள் – I) (விரிந்துரைக்கும் வகை)

தேர்வு நாள் : 03.12.2024 மு.ப.


பதிவு எண் :

விண்ணப்பதாரரின் கையொப்பம் மற்றும் தேதி

**சான்று**

நான் இந்த வினா விடைத் தொகுப்பை விண்ணப்பதாரரின் பதிவு எண், புகைப்படம் மற்றும் கையொப்பம் ஆகியவற்றை நுழைவுச்சீட்டினில் சரிபார்த்த பின் வழங்கினேன்.

அறைக்கண்காணிப்பாளரின் கையொப்பம் மற்றும் தேதி

**சான்று**

(தேர்வு முடிவுற்றவுடன் கையொப்பமிட வேண்டும்)

நான் இந்த வினா விடைத் தொகுப்பில் பதிலளிக்காத விடைப் பகுதிகளை தேர்வு எழுதப் பயன்படுத்திய கருப்பு மை பேனா(மையூற்று பேனா அல்லது பந்துமுனை பேனா அல்லது ஜெல் பேனா)வினால் குறுக்குக் கோடிட்டுள்ளேன் என உறுதியளிக்கிறேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம் மற்றும் தேதி

Teachingninja.in
Do not use this area

Do not use this area



Teachingninja.in

# தாள் – I

# தமிழ்மொழி தகுதித் தேர்வு

## (விரிந்துரைக்கும் வகை)

## (பத்தாம் வகுப்புத் தரம்)

கால அளவு : மூன்று மணி நேரம் | மொத்த மதிப்பெண்கள் : 100

(இவ்வினா-விடைத்தாள் தொகுப்பு 32 பக்கங்களைக் கொண்டுள்ளது)

**அறிவுரைகள்**

(கீழ்க்கண்ட அறிவுரைகளை தேர்வர்கள் தவறாமல் பின்பற்ற வேண்டும்)

1. தாள்-Iஇல் குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்கள் 40 பெற்றால் மட்டுமே பிறதாள்கள் மதிப்பீடு செய்யப்படும்.

2. தேர்வர்கள் இவ்வினா-விடைத்தாள் தொகுப்பு மொத்தம் 32 பக்கங்களைக் கொண்டுள்ளது என்பதை முதலில் உறுதி செய்து கொள்ள வேண்டும். வினா-விடைத்தாள் தொகுப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின், தேர்வர் அதனை தேர்வு தொடங்குவதற்கு பத்து நிமிடங்களுக்கு முன்னதாக அறைக்கண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு முழுமையான வினா-விடைத்தாள் தொகுப்பினை கட்டாயம் பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு குறைபாடு குறித்து முறையிட்டால், மாற்றித் தரப்படமாட்டாது.

3. (i) தேர்வர்கள் ஒவ்வொரு வினாவிற்கும் விடை எழுதுவதற்கென வினா-விடைத்தாள் தொகுப்பில் ஒதுக்கப்பட்ட இடத்தில் மட்டுமே விடையளிக்க வேண்டும். விடையளிக்க ஒதுக்கப்பட்ட இடத்திற்கு வெளியே எதையும் எழுதக்கூடாது.

   (ii) தேர்வர்கள் வினாக்களுக்கு விடையளித்த பின்னர் மீதமுள்ள வெற்றிடங்களையும் விடையளிக்காத வினாவிற்கான வெற்றிடங்களையும் அனுமதிக்கப்பட்ட கருமை நிற மை பேனாவினால் குறுக்கு கோடிட்டு கண்டிப்பாக அடித்துவிட வேண்டும்.

4. தேர்வர்கள் இவ்வினா-விடைத்தாள் தொகுப்பில் ஒவ்வொரு பிரிவிலும் அறிவுறுத்தப்பட்டுள்ள எண்ணிக்கையிலான வினாக்களுக்கு மட்டுமே விடையளிக்க வேண்டும். அதற்கு மிகையான எண்ணிக்கையிலான வினாக்களுக்கு விடையளித்தால், ஒவ்வொரு பிரிவின் முடிவிலும் மிகையான எண்ணிக்கையில் விடையளிக்கப்பட்டவை கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது.



Teachingninja.in

5. தேர்வர்கள் தங்களது பதிவு எண்ணை இவ்வினா-விடைத்தாள் தொகுப்பில் எந்த இடத்திலும் எழுதக்கூடாது. இந்த அறிவுரையை மீறும் தேர்வர்களின் விடைத்தாட்கள் செல்லாததாக்கப்படும்.

6. தேர்வர்கள் இவ்வினா-விடைத்தாள் தொகுப்பில் கையொப்பமிடுவதற்கென குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து இடங்களிலும் கையொப்பமிட வேண்டும். கையொப்பமிடாத தேர்வர்களின் விடைத்தாட்கள் செல்லாததாக்கப்படும்.

7. தேர்வர்கள் இந்த வினா-விடைத்தாள் தொகுப்பிலிருந்து எந்தத் தாளையும் கிழித்துவிடக் கூடாது.

8. இத்தேர்வைப் பொறுத்தவரை, அழகாக எழுதுவதற்காகத் தனியாக மதிப்பெண்கள் ஒதுக்கப்படவில்லை.

9. தேர்வர்கள் விடையளிக்கும் போது வினா எண்ணையும், அதன் உட்பிரிவையும் தவறாமல் குறிப்பிட வேண்டும்.

10. தேர்வர்கள் கடித வடிவிலான வினாக்களுக்கு விடையளிக்கும் பொழுது தங்களது பெயரையோ, பதிவெண்ணையோ எழுதக்கூடாது. தங்களது பெயரில் கையொப்பமிடவும் அனுமதியில்லை. அவ்வாறான வினாக்களுக்கு பதிலளிக்கும்பொழுது வினாக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர் மற்றும் முகவரியையே பயன்படுத்த வேண்டும்.

    வினாக்களில் பெயர், முகவரி ஆகியவை குறிப்பிடப்படவில்லையெனில், ‘அனுப்புநர்’, ‘பெறுநர்’ முகவரிகளில் ‘அ ஆ இ’ அல்லது ‘எக்ஸ் ஒய் இசட்’ போன்ற பொதுப் பெயர்களை மட்டுமே எழுத வேண்டும்.

---



Teachingninja.in

## அலகு — 1 (அ)

*குறிப்பு :* **i)** கொடுக்கப்பட்ட தமிழ்ப் பகுதியை நன்கு படித்து கருத்துச் சிதையாமல் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கவும் :

**(1 × 10 = 10)**

| | |
|---|---|
| Q.No. 1 | குழந்தைகள் ஏன் பள்ளிக்குச் செல்கின்றனர்? மொழி, கணிதம், புவியியல், வரலாறு, அறிவியல் இன்னோரன்னவற்றைக் கற்கச் செல்கின்றனர் என நீங்கள் கூறலாம். எவ்வாறு கற்கவேண்டும் என்பதைக் கற்கவே நாம் பள்ளிக்குச் செல்கின்றோம். எவ்வாறு கற்க வேண்டும் என்பதனை உண்மையில் உணர்ந்தவனே பள்ளியை விட்டுச் சென்றாலும் தொடர்ந்து கற்கின்றான். மற்றொரு வகையில் கூறவேண்டுமாயின் ஒருவன் கற்றுக் கொள்ளும் கலையைப் பள்ளியில் கற்காதவன், தானாகக் கற்றுக்கொள்ளும் ஆற்றலற்றவன் ஆகின்றான் எனலாம். |

## அலகு — 1 (ஆ)

*குறிப்பு :* **ii)** கொடுக்கப்பட்ட ஆங்கிலப் பகுதியை நன்கு படித்து கருத்துச் சிதையாமல் தமிழில் மொழிபெயர்க்கவும் :

**(1 × 10 = 10)**

| | |
|---|---|
| Q.No. 2 | Archaeological sources for the bedrock of information for us to understand this long span of time in Indian History. They include archaeological sites, geological sediments, animal bones and fossils, stone tools, bone tools, rock paintings and artefacts. There is no written evidence for this period. Although the Harappans used a script, it is yet to be deciphered. The Faunal (animal) and Floral (plant) sources are important for understanding the relationship of the Stone Age people and with their environment. The human genes also constitute and important, source for understanding pre historic migrations. |

## அலகு — 2

*குறிப்பு :* **i)** கொடுக்கப்பட்ட பகுதியை அதன் அளவில் மூன்றில் ஒரு பங்கு அளவில் சுருக்கி உங்கள் சொந்த நடையில் எழுதுக. தலைப்பு தேவையில்லை.

**(1 × 10 = 10)**

| | |
|---|---|
| Q.No. 3 | மனிதன் தனக்கு எதிரே இல்லாதவர்களுக்கும், பின்னால் வரும் தலைமுறையினருக்கும் தனது கருத்துக்களைத் தெரிவிக்க விரும்பினான். அதற்காகப் பாறைகளிலும், குகைச் சுவர்களிலும் தன் எண்ணங்களைக் குறியீடுகளால் பொறித்து வைத்தான். இதுவே எழுத்து வடிவத்தின் தொடக்க நிலை ஆகும்.<br><br>தொடக்க காலத்தில் எழுத்து என்பது ஒலியையோ வடிவத்தையோ குறிக்காமல் பொருளின் ஓவிய வடிவமாகவே இருந்தது. இவ்வரிவடிவத்தை ஓவிய எழுத்து என்பர். அடுத்ததாக ஒவ்வொரு வடிவமும் அவ்வடிவத்திற்கு உரிய முழு ஒலியாகிய சொல்லைக் குறிப்பதாக மாறியது. அதன்பின் ஒவ்வொரு வடிவமும் அச்சொல்லின் ஓசையைக் குறிப்பதாயிற்று. இவ்வாறு ஓர் ஒலிக்கு ஓர் எழுத்து என உருவான நிலையை ஒலி எழுத்து நிலை என்பர். இன்று உள்ள எழுத்துக்கள் ஒரு காலத்தில் பொருள்களின் ஓவியமாக இருந்தவற்றின் திரிபுகளாகக் கருதப்படுகின்றன. காலந்தோறும் தமிழ் எழுத்துக்களின் வரிவடிவங்கள் பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகி வளர்ச்சி அடைந்து வந்துள்ளன. அச்சுக்கலை தோன்றிய பிறகே தமிழ் எழுத்துக்கள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற்றுள்ளன. |



Teachingninja.in

## அலகு — 3

*குறிப்பு :* **i)** கொடுக்கப்பட்டுள்ள பத்தியை நன்கு படித்து அதன் கீழ் கேட்கப்பட்டுள்ள ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.

**ii)** ஒவ்வொரு வினாவிற்கும் இரண்டு மதிப்பெண்கள்.

**(5 × 2 = 10)**

| Q.No. 4 | சோழநாட்டில் பாயும் காவிரியானது மலையிலிருந்து பூக்களைக் கொண்டுவரும். காவிரிக் கரையில் பூக்களில் தேன் நிறைந்திருப்பதால் வண்டுகள் ஆரவாரம் செய்து கொண்டேயிருக்கும்.<br><br>வயல்வெளியில் நாற்றுநட்டபின் வளர்ந்த நாற்றின் முதலிலை விரிந்து வரும்போது களைபறிக்கும் பருவம் வந்ததை உழவர்கள் அறிந்து கொள்வர். களைகளைக் களைய வரும் உழத்தியரின் கால்களில் குளிர்ந்த முத்துக்களை ஈனும் சங்குகள் இடறியதால் அவர்கள் இடையானது தளர்ந்து, மென்மையாக நடந்து வாய்க்கால் வரப்பினை அடைவர்.<br><br>காடுகளில் கரும்புகள் நிறைந்துள்ளன. சோழநாட்டில் உள்ள நீர்நிலைகளின் கரைகளில் இளைய அன்னங்கள் உலாவிக் கொண்டிருக்கின்றன. இங்குக் குளங்கள் அனைத்தும் கடலைப்போன்ற பெரிய பரப்பை உடையதால் நீர்நாடு என்றும் கூறும் விதமாக உள்ளது.<br><br>துறைமுகங்களில் அன்னங்கள் விளையாடுகின்றன. இங்குள்ள நீர்நிலைகளில் எருதுகள், வாளைமீன்கள் துள்ளி விளையாடுகின்றன. இங்கு அரசமரம், கடம்ப மரம், குரா மரம், பச்சிலை மரம் போன்றவை வளர்ந்துள்ளன. பெரிய அடிப்பாகத்தைக் கொண்ட பனை, சந்தனம், மலரான நாகம், நீண்ட இலையையுடைய வஞ்சி, காஞ்சி என எங்கும் செழிப்பாக உள்ளது. |
|---|---|
| 1. | காவிரி நீர் பாயும் நாடு எது? |
| 2. | களைபறிக்கும் பருவத்தை உழவர்கள் கண்டறியும் விதம் குறித்தெழுதுக. |
| 3. | உழத்தியரின் கால்கள் எவற்றில் இடறியன? |
| 4. | சோழநாடு 'நீர்நாடு' என அழைக்கப்பட காரணம் யாது? |
| 5. | சோழநாட்டில் காணப்படும் மரங்களின் பெயர்கள் சிலவற்றைக் குறிப்பிடுக. |



Teachingninja.in

## அலகு — 4

*குறிப்பு :* **i) கொடுக்கப்பட்டுள்ள சுருக்கக் குறிப்புக்களைக் கொண்டு விரிவாக எழுதுக.**

**ii) 300 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.** **(1 × 10 = 10)**

| | |
|---|---|
| Q.No. 5 | புதிய கற்கால மக்கள் – குடியேறி – நிலையான வாழ்க்கை – உழவுத்தொழில் – ஆடு மாடுகள் வளர்த்தல் – படகுகள் – பயின்ற கலைகள், – பெருங்கற்புதைவு – இரும்புக்காலம் – செம்புக்காலம் – வெண்கலக்காலம் – கற்காலம் – மக்கள் – இரும்பைக் கண்டுபிடித்தல் – மட்கலன்கள் கிரீட் என்னும் தீறலும் பாலதீனத்திலும் – ஆதிச்சநல்லூர் – கற்கருவிகள் – இரும்புக் கருவிகள் கற்காலம் முடிவுறும் போதே இரும்புக்காலமும் தொடங்கி விட்டது என்று கருத இட மேற்படுகிறது. |

## அலகு — 5

*குறிப்பு :* **i) திருக்குறள் தொடர்பான கட்டுரை வரைதல்.**

**ii) கொடுக்கப்பட்டுள்ள ஐந்து வினாக்களில் ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளிக்கவும்.**

**iii) 300 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.**

**(1 × 15 = 15)**

| | |
|---|---|
| Q.No. 6 | (அ) திருவள்ளுவர் கூறும் 'நடுவுநிலைமை' குறித்து கட்டுரை வரைக. |
| | (ஆ) 'பெரியாரைத் துணைக்கோடல்' அதிகாரம் மனித வாழ்க்கைக்கு நற்பண்புடையோரின் துணை எவ்வளவு முக்கியமானது என்பதை வள்ளுவர் வழி விளக்குக. |
| | (இ) 'கற்றலின் கேட்டல் நன்று' என்பதனை 'கேள்வி' அதிகாரம் வழி மெய்ப்பிக்க. |
| | (ஈ) ஒழுக்கத்தின் சிறப்பினை வள்ளுவர் எங்ஙனம் போற்றியுள்ளார்? |
| | (உ) 'நட்பாராய்தல்' அதிகாரத்தில் நட்பினைப் பற்றி வள்ளுவரின் கருத்துக்களை நிறுவுக. |



Teachingninja.in

## அலகு — 6

*குறிப்பு :* **i)** கடிதம் வரைதல்

**ii)** கொடுக்கப்பட்ட மூன்று வினாக்களில் ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளிக்கவும்.

**iii)** **250** வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

**(1 × 15 = 15)**

| | | |
|---|---|---|
| Q.No. 7 | (அ) | காவிரியாற்றின் குறுக்கே கட்டப்படும் உயர்மட்டப்பாலத்தின் கட்டுமான திட்டத்திற்கான திட்ட அறிக்கையைக் குறித்து மதிப்பீடு செய்க. |
| | (ஆ) | தமிழ் வளர்ச்சித் துறையால் அயல்நாடு மற்றும் வெளிமாநிலங்களில் வாழும் தமிழர்களுக்காக உருவாக்கப்பட்ட 'தமிழ் இணையக் கல்விக் கழகத்தின்' திட்டத்தினை மதிப்பீடு செய்க. |
| | (இ) | தமிழக அரசின் 2025 ஆண்டிற்கான பொங்கல் பரிசாக இலவச அரிசி, வேட்டி, சேலையுடன் ரூபாய் 5,000/- வழங்க வேண்டி அரசாணை வெளியிடுக. |

## அலகு — 7

*குறிப்பு :* **i)** பின்வரும் ஐந்து பிரிவுகளில் ஒவ்வொரு பிரிவிலும் நான்கு வினாக்கள் உள்ளன.

**ii)** ஒவ்வொரு பிரிவிலும் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

**iii)** ஒவ்வொரு பிரிவிற்கும் நான்கு மதிப்பெண்கள்.

**iv)** ஐந்து பிரிவுகளுக்கும் சேர்த்து மொத்தம் இருபது மதிப்பெண்கள்.

**(5 × 4 = 20)**

| | | |
|---|---|---|
| Q.No. 8 | | கீழ்க்காணும் சொற்களை உமது சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுக. |
| | (1) | தடதட |
| | (2) | அத்தி பூத்தது |
| | (3) | படபட |
| | (4) | கூகூ |
| Q.No. 9 | | பின்வரும் இணைச் சொற்களைப் பயன்படுத்தி ஒரே தொடர் அமைக்க |
| | (1) | கல்வி கேள்வி |
| | (2) | ஆடி அசைந்து |
| | (3) | ஈடு இணை |
| | (4) | மேடு பள்ளம் |



Teachingninja.in

| Q.No. | |
|---|---|
| Q.No. 10 | **பிரித்தெழுதுக.** |
| | (1) ஏடெடுத்தேன் |
| | (2) மாரியொன்று |
| | (3) கோட்டோவியம் |
| | (4) இன்சொல் |
| Q.No. 11 | **எதிர்மறை வாக்கியமாக மாற்றி எழுதுக.** |
| | (1) இரவு அதிகமாக மழை பெய்தது. |
| | (2) நேற்று நான் படம் பார்த்தேன். |
| | (3) வீதி மிகவும் சுத்தமாக இருந்தது. |
| | (4) அதை நான்தான் செய்தேன். |
| Q.No. 12 | **பிழை நீக்கி எழுதுக :** |
| | (1) பெண்கலுக்கான நலத்திட்டங்கலை அரசு முன்னெடுத்துள்ளது. |
| | (2) சமுகப் பொருலாதார வளற்ச்சியில் சமுக ஒற்றுமை முக்கிய இடம் வகிக்கிறது. |
| | (3) சுயமறியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தவர் பெரியார். |
| | (4) இரட்டைக் காப்பியங்கல் எனப்படுவன சிலம்பும் மனிமேகலையும் ஆகும். |



Teachingninja.in